ஓம்
ஸ்ரீராமஜெயம்



யாழ் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும்
இலண்டனை இறுதிக்கால வதிவிடமாகக்
கொண்டவருமான
திரு இராஜகோபால் உதயகுமார் அவர்களது
பிரிவையொட்டி வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

**16.09.2007**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பு நிறைந்த பேரொளியாய்!
இன் சொற்பேசி நல்லவராய்!
வல்லவராய்!
அனைவருடனும் நேசத்துடனும்
இன்முகத்தினராய் வாழ்ந்து,
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது ஒளிவிளக்கின்
திருப்பாதங்களுக்கு
இம்மலரை சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
ஸ்ரீராமஜெயம்



உதயம்
19.05.1958

அஸ்தமனம்
13.08.2007

# திதி வெண்பா

ஆண்டு சர்வசித்து ஆடி இருபத்தியெட்டு
பூண்ட திங்கள் நாள் பூர்வபக்க பிரதமையில்
நற்குணத்தோன் இராஜகோபால் உதயகுமார்
பொற்பாதம் இறைவனடி நல்கிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடைய மல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந்தனவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

கற்பனைக் கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும் பற்றியே மாதிருப்புகழ் பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வின் முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமதானசற் குணர்நேயா ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா வெற்றிவேலாயுதப் பெருமாளே

## திருமந்திரம்

சிவ சிவ வெண்கிலர் தீவினையாளர்
சிவ சிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ வென்றிடத் தேவருமாவர்
சிவ சிவவென்னச் சிவகதூ தானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அரங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

ஈசன்அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப்பன் யான்

கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்யாயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட முடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச்சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம்ஜயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற்பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீராமஜெயம்

சாந்தாகாரம் புஜகசயனம் பத்மநாபம்
- ஸீரேசம்
விச்வாதாரம் கனஸத்ருசம் மேகவர்ணம்
- சுபாங்கம்!
லஷ்மி காந்தம் கமல நயனம் யோகிஹ்ருத்யான
- கம்யம்
வந்தே விஷ்ணும் பவபயஹரம் ஸர்வலோகைகநாதம்.

2. அருமறை முதல்வனை ஆழிமாயனைக்
கருமுகில் வண்ணனை கமலக் கண்ணனை
திருமகள் தலைவனை தேவதேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி வாழ்த்துவோம்.

3. பச்சை மாமலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா, அமரர் ஏறே ஆயர்தம்
கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகர் உளானே.

4. அங்கணெடு மதிள்புடைசூழ யோத்தி யென்று
அணிநகரத் துலகனைத்தும் விளக்கும் சோதி
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி
விண்முழுது முய்யக் கொண்ட வீரன்றன்னை
செங்கணெடுங் கருமுகிலை இராமன் றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
எங்கள் தனி முதல்வனையெம் பெருமான்றன்னை
என்று கொலோ கண்குளிரக் காணு நாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியம் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை
சூடிய சிலையிராமன் தோள்வலி கூறு வோர்க்கே

6. மும்மைசால் உலகுக் கெல்லாம் மூலமந்திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தாமே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்துமாம் இராமன் என்னும்
செம்மைசேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக்கண்டாள்.

7. நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
ஜென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராமா என்றிரண்டெழுத்தினால்.

## முருகன் துதி

8. நின்னருளால் கதியின்றி மற்றொன்றிலேன்
நெடுங்காலம் பிழைசெய்த நிலை கழிந்தேன்
உன்னருளுக் கினிதான நிலையுகந்தேன்
உன்சரணே சரணென்னும் துணிவு பூண்டேன்
மன்னிருளாய் நின்றநிலை யெனக்குத் தீர்த்து
வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தேனுன்னை
இன்னருளாலினி யெனக்கோர் பரமேற்றாமல்
என்திருமால் ! அடைக்கலங் கொளென்னை நீயே.

9. பன்னிரு கரத்தாய் போற்றி
பசும்பொன் மாமயிலாய் போற்றி
முன்னிய கருணை ஆறு
முகப் பரம்பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக்
கருணை வாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள்
இருக்கு மாமணியே போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு.இராஜகோபால் உதயகுமார் அவர்களின் வாழ்க்கை வரலாறு

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜ பெருமாள் கோவிலடியில் வசித்துவந்த திரு இராஜகோபால் திருமதி சரஸ்வதி இராஜகோபால் அவர்களுக்கு ஐந்தாவது பிள்ளையாய் இப்புவியில் அவதரித்தார். இவரது சகோதரர்கள் அனுசூயா, விஜயகுமார், ஜெயசூயா, சேதுகுமார், ரவீந்திரகுமார், இராஜசூயா, இராஜ்குமார் ஆவார்கள்.

தனது இளம் பிராயத்திலிருந்தே தன் உடன் பிறந்தோருடன் இணைந்து வாழ்ந்து வந்தார். தனக்கென சிறந்த பண்புகளை கொண்டிருந்தார். தனது இளமைக் காலத்தினை அருகிலுள்ள யாழ் சன்மார்க்க போதன வித்தியாசாலையில் கல்வியை ஆரம்பித்தார். பாடசாலையைத் தவிர இவர் வேறு ஒ்ரு இடமும் சுற்றித்திரிய வேண்டும் என்ற ஆவல் கொண்டவரல்ல. பெற்றோர் சகோதரங்களுடனேயே சேர்ந்து இருப்பார். அண்டை அயலாருடன் மிகவும் அன்பாகப் பழகி அவர்களின் நட்பையும் பெற்றவர். மிகவும் சாந்தமான குணம் மிக்கவர். பெற்றோர் சொற்படி கேட்டு நடப்பார். தனது சகோதர சகோதரிமாருடன் ஒற்றுமையாகவும் அவர்களுக்கு உதவியாகவும் இருந்துவந்தார். தனக்கென நற்பண்புகளைத் தனக்குள்ளேயே கொண்டிருந்தார். இதை யாரிடமும் அவர் கற்று வரவில்லை. அவரின் இளமைப் பிராயம் ஒருவித விஷேசமானது. மற்றைய இளையோரைப்போல் அங்கு இங்கு என்று ஓடித்திரிபவர் அல்ல. தனது வீடும் பாடசாலையும் என்றே இருப்பார். உதி என்றால் வீட்டில் அமைதி என்றே எனக்குப் பொருள்படுகிறது. காலங்கள் சென்றன. தாய்நாட்டின் சீரற்ற தன்மை காரணமாக 1984இல் தனது அடுத்த இளைய சகோரதரின் ஒத்தாசையினால் பிரான்ஸ் வந்து சேர்ந்தார். அங்கும் தனது தம்பி மைத்துனியுடன் ஒன்றாக வாழ்ந்து வந்தார். பெற்றோர் நிச்சயம் செய்த தம் இனத்தவரான திரு திருமதி ஜெயராஜசிங்கம் அவர்களின் மூத்த மகளான இந்துமதியை இலங்கையில் இருந்து வரவழைத்து பெண்ணின் சகோதரரின் ஜெர்மனி இல்லத்தில் திருமணம்
இனிதே நடந்தேறியது.

மீண்டும் தனது வாழ்விடமான பிரான்ஸ் வந்து தனது இல்லற வாழ்க்கையை ஆரம்பித்தார். 1992இல் பெண்குழந்தைச் செல்வத்திற்கு அப்பா ஆனார். தனது மகளைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தார். தனக்கும் தனது குடும்பத் தாருக்கும் தாய் நாட்டில் வசிக்கும் பெற்றோர் சகோதரிகளுக்கும் தன்னாலான உதவிகளை அவ்வப்போது செய்திருந்தார். 1992இல் தனது மூத்த சகோதரி தனது அயல் நாடான இங்கிலாந்து வந்த செய்தி கேட்டு முதன் முதலில் ஓடோடிவந்து பார்த்து சென்றார். இரண்டாந்தடவையாகவும் அவர் தனது குடும்பத்தாருடன் 1994இல் இங்கிலாந்து வந்து இளைய சகோதரியின் திருமணத்திலும் பங்கு கொண்டார். திரும்பவும் பிரான்ஸ் சென்று அங்கிருந்து 1997இல் இங்கிலாந்து வந்து நிரந்தரமாகக் குடியேறினார். அங்கும் அவர் தனது மூத்த சகோதரியின் இல்லத்தில் தங்கியிருந்து தன் குடும்ப வாழ்க் கையைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தார். 1997இல் அவரது தாயார் இங்கிலாந்து வர சந்தர்ப்பம் கிடைத்தது. ஆகவே தாய் சகோதரி மைத்துனர் மருமக்களுடன் தன் குடும்பத்தாரையும் இணைத்து மீண்டும் ஒரு கூட்டு வாழ்க்கையை தனது இளம் பராயத்திலிருந்ததை போன்று தொடர்ந்தார். தனது நற்பண்புக்கமைய எவருடனும் அன்பாக பழகி நட்பைப் பெற்றுக்கொண்டார்.
1997இல் இவ்விடம் வந்தும் தனக்கொரு தொழிலைத் தேடி அலையவில்லை. பிரான்சில் இருந்து வந்ததும் அவரை வேலை காத்துக் கிடந்தது போல் திரு இராஜகுலசிங்கம் அவரின் பெற்றோல் நிரப்பு நிலையத்தில் உதவியாளராகப் பணி புரிந்தார். அங்குள்ள தனக்குரிய கடமைகளை செவ்வனே செய்து தனக்கென ஒரு இடத்தை சகல ஊழியரிடமிருந்து பெற்றுக் கொண்டார். அங்குள்ள பணியாட்களுக்கும் இயக்குனருக்கும் இடையில் ஒரு பாலமாக விளங்கினார். யாவரும் இவரை உதி அண்ணா என அன்பாக அழைப்பார்கள்

தனது ஒரே மகளை நன்றாக கல்வி கற்பிக்க வேண்டும் என்ற ஆர்வம் அவர் மனதில் வேரூன்றி நின்றது அதற்காக தன் கடமைக்கு அதிகாலை எழுந்து தன் மகளையும் பாடசாலைக்கு நேரத்துக்கே கூட்டிச் செல்வார். அன்று யாழ் இல்லத்தில் தான் எடுத்துக்கொண்ட தன் கடமையினைப் போன்று இங்கும் தனது செயற்பாடுகளை கவனித்து வந்தார். எதற்கும் மூத்த சகோதரியின் ஆலோசனையின்படி வழிநடப்பார்.
2001இல் தனது மூத்த சகோதரியின் வியாபார நிலையத்ததில் வேலை செய்யவேண்டும் என்ற பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். இங்கும் தனது கடமையினை இனிதே செய்து கடைக்கு வரும் பாவனையாளர்களை சந்தோசப்படுத்தி அனுப்புவார்.
2003ம் ஆண்டளவில் தனது குடும்பத்தாருடன் இந்தியா சென்று மாமா மாமியைச் சந்தித்து ஓரிரு யாத்திரை ஸ்தலங்களையும் தரிசித்து வந்தார். இவ்வருட ஆரம்பத்தில் மாமனார் இந்தியாவில் காலமானார் என்ற செய்தி கேட்டதும் தொலைபேசியில் அனுதாபத்தை தெரிவித்துவிட்டு, அவர் மகளின் கோடைகால விடுமுறையில் குடும்பத்தாருடன் இந்தியா சென்று தனது மாமியாரைப் பார்த்து வரலாம் என எண்ணியிருந்த வேளையில் அவர் எதிர்பாராத வண்ணம் கடும் சுகவீனமுற்றார். விட்டுக்கு அண்மையில் இருக்கும் சென் ஜோர்ஜஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதியுயர் நோய்வாய் சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார். தொடர்ந்து மூன்று வாரங்கள் கடந்தன. வைத்திய நிபுணர்களும் தங்களாலான முயற்சிகளைச் செய்து இறுதியில் சிகிச்யை பயனளிக்காது போக எல்லோரும் ஆண்டவன் மேல் பாரத்தைப் போட்டு நாழும் பொழுதும் ஆண்டவனையே பிரார்த்திப்தோம். பாஸ்டர் ரவி தேவதாஸ் குடும்பமாக தினமும் வந்து தங்கள் ஜெபத்தினை தொடர்ந்து நடத்தி வந்தார். இறுதியில் கடவுளிடமே சரண் அடைந்தோம் அவரும் அவரின் ஆத்மாவை 13.08.2007 (திங்கள்) அன்று பிற்பகல் 4மணியளவில் எடுத்துக் கொண்டார்.

ந.தவபாலசிங்கம்
மைத்துனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயார் பரிதவிப்பு
## இராஜகோபால் சரஸ்வதி அம்மையார்

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் என கேட்டதாய் - குறள்

உதி யென்று உனை நாம் வாய்குளிர அழைத்து உன்
கதி யென்று தானே நானிருந்தேன் இவ்வுலகில்
விதி யொன்று உண்டே இவ்வையகத்தில் என்ன
மதி வந்து என் செல்வத்தை எடுத்தானே காலன்

ஊட்டிய பால் உன் வாயிலிருந்து உலருமுன்னே
போட்டியா எனைவிட்டு இம் மலரும் வயதில்
ஈட்டியால் என் இதயத்தில் ஏற்றிவிட்டு
வாட்டியே என் மனதை ஏன் சென்றாய்

பொன்னும் மணியும் உனக்கு பெரிதல்ல எனது
எண்ணும் போதெல்லாம் எடுத்துரைப்பாய் என்
கண்ணிரண்டும் பார்க்குமிடமெல்லாம் என்கனவிலும்
மின்னுதையா உன்னுருவம் உதயா என்னும்

ஊர் விட்டு உலகமெல்லாம் சென்று எமக்காக
பாரில் நீ பட்ட கஷ்டம் நானறிந்து பதறி
நேர்மையாய் நீ நடந்த பாதை பார்த்து என்
வேரையே நானிழந்து நிற்கின்றேன் பாதகியாய்

இன்னோர் பிறப்புண்டு என்றால் இம்மண்ணில்
மன்னா நீ மகனாக வருவாயா
அந்நாளை நோக்கி அழுது கண்ணிருடன்
பொன்னா திருப்பாதம் போற்றுவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி இந்துமதி சிந்திய கண்ணீர்

காலையெழுந்து உன் கடமைகள் நிறைசெய்து என்
வேலை உன் பாதம் பணிந்து பக்கமிருந்து
வேலையுடையான் வேதம் படித்து தினம்
போல உணவளித்து உடையெடுத்து உள்ளம்குளிர உனையனுப்பி
மாலை வரை பொறுத்து உன் அன்புமுகம் காண
வேலி வரை வந்து விரும்பி நிற்பேன் இன்று
தாலி இழந்து நிறசேலை இழந்து நிற்கின்றேன்

அன்று மணம் புரி நாள் என் கரம்பற்றி
அன்பே உனைநான் ஒருபோதும் பிரியேனென்றாய்
இன்று எனை ஏமாற்றி இறை பதமடைய
நன்றே என்று நற்கதி யடைந்தாய்

செப்பாரும் என் தெய்வம் நீ சென்றாய் சிவபதம்
வெப்ப உடலும் வெதும்பிய உள்ளமும் மேதினியில்
ஒப்பாரும் உளரோ உனைப்போல் இவ்வுலகில்
ஒப்பாரி பாடவைத்து எங்கே சென்றாய் என் தெய்வமே

இந்துமதி
மனைவி

## எங்கே என் அம்மா

அப்பா என்றால் அன்பு அரவணைப்பு செல்லம் எல்லாம்
தப்பாக்கி சென்றாய் அறிவாயோ என் பரிதவிப்பு
எப்படி நீ அறிவாய் இறைசெய்த பறிப்பு
தப்பாமல் உன் சேவைசெய்ய எனக்கொரு வரம்வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவழியும் என்னை அழைத்து செல்வாய் இன்று தனி
வழியில் விட்டு ஏன் சென்றாய் அப்பா
மகளே நீ என் அம்மா என்று
புகழாரம் சூட்டி புவியில் மகிழ்வாய்
திகழும் இப்புவியில் திறமையுடன் இருக்கும்
மகளுடன் இருக்க மனம் வரவில்லையா?
நாளெல்லாம் ஏங்கி தவிக்கின்றோம் உன்பிரிவால்
இளமகள் நானுனக்கு பிதிர்கடன் செய்ய ஏன்வைத்தாய்

மகள்
அர்ச்சனா

## சகோதரி கண்ணீர்

தூக்கி வளர்த்து தாலாட்டி சீராட்டி
பாக்கியம் பெற்றேன் பலர் போற்ற உனை
ஆக்கியே அகமகிழ்ந்து வாழ நானும் குமுற
சீக்கிரம் எனைவிட்டு ஏன் பிரிந்தாய் இன்று

பக்கத்தில் நீயிருந்தால் பசியே இல்லை என்று
எத்திக்கும் எல்லோரும் உணர வாழ்ந்து
தித்திக்கும் உன் பேச்சால் வசீகரித்து
பத்துப்பேர் பேச பாரினில் வாழ்ந்தாய்

அன்புச் சகோதரனாய் என்னோடு வந்துதித்து
இன்சொல் பேசி இனிதாய் மகிழ்ந்திருந்தீர்
நன்மை செய்வதற்கே- நல் அவதாரமாய்
தம்பியாய் நின்று எனக்கு கைகொடுத்தீர்
நம்பியிருந்த எனை நட்டாற்றில் கைவிட்டாய்
வெந்து தவிக்கிறேன் தம்பி என்ன அவசரமோ
பந்தம் துறப்பதற்கு.

அனுசூயா தவபாலசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## In Memory my Brother Uthy

It is with deep sadness and pride that I write about our unforgottable and loveable brother UTHAYAKUMAR, we called him, Uthy! Uthy!. Uthy means rise up, the sun sets in the evening and rise up in the morning but Uthy had now gone to a place where he couldnt's rise up again but he lives in our memories.

We all were brought up like one mother children he had a special nature and owned his personality in his life. I would admire that the way he used to dress up nicely, neat and tidy. No matter where and when he had to go.

He was an extra ordinary person among his four brothers and three sisters. He used to speak very softly is his low voice without hurting anyone. He was always cheerful to welcome people I cannot forget his hospitality.He enjoyed preparing special delicious food according to the individual taste.Especially he concerned about children's favourite and prepared their special foods such as pizza,lasagne etc.

Still I'am unable to forget the time when he was happy on the day he celebrated only daughter's puberty ceremony. Afterwards he came to me personally and asked ACCA are you satisfied with the whole ceremony how it performed. Like this incident he always concerned me as one of the important person in his family.

We all wish the grace of the God that his loveable wife Inthumathy and precious daughter Archana will fufill his desires with the help of his Mother, brothers and sisters, especially Mr & Mrs Thavabalasingam.

**Periyakka**
**Varatha Jacob**
**Norway**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரிகள் புலம்பல்

அக்கா தங்கை தம்பி உறவெல்லாம்
ஆழ்கடலில் மூழ்கியதோ
அன்பினால் கலந்த இரத்தபாசம்
காலத்தால் அழித்துவிட சாத்தியமோ?
ஒன்றாக உணவுண்டு பாசங்கள்
ஒருபோதும் மாறாது நினைவிருக்கும்
ஒன்றல்ல இரண்டல்ல உத்தமனே
உன்னை எண்ணி நாம் அழுவதற்கு
கண்ணான எம் உடன் பிறப்பே
கண்ணீர் தான் எங்களது காணிக்கை

அனுசூயா, ஜெயசூயா, இராஜசூயா,
வரதலக்சுமி, சறோஜினிதேவி, விஜயலக்சுமி

## சகோதரி புலம்பல்

எங்கள்
திருமணித் தாய் வயிற்றில்
எண் மரமாய்
மலர்ந்தோம்
இம் மண்ணில்

தேசம் கடந்ததே நீ வாழ்ந்தாலும்
நேசம் மிக்க தம்பியாய்
நீ இருந்தாய்
எனக்கு!

ஏன்
இந்த அவசரம் கொண்டு
எம்மையெல்லாம்
விட்டகன்றாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்
கடைசி நிமிடங்கள் கூட
எம்மைக் கண்டுவிடத்
தவித்தாயே!

இப்பிறவி தப்பியதே - எனி
எப்பிறவி வாய்க்குமடா
உனைக் காண?

**ஜெயசூயா இராஜேந்திரா, கொழும்பு இலங்கை**

## சகோதரர்கள்

நம்பியிருந்தோம் உன்துணையால் இன்று
வெம்பி அழுகின்றோம் உன் நினவால்
தம்பி அண்ணா என்று பாசம் பொழிந்தாய்
எப்பிறப்பில் உனை நாம் காண்போம் இனி.
இனி எமக்கு கையில்லை உன் இழப்பால்
தனிவழியில் நீ சென்றாய் பாசம் விட்டு
வினையிதனை எப்படி நாம் பொறுப்போம்
கனியிருக்க காய் பறித்தானே காலன்

**விஜயகுமார், சேதுகுமார், ரவீந்திரகுமார், இராஜ்குமார்**
**அம்பிகைபாகன், சூரியகுமார்**

## பெறாமக்கள், மருமக்கள்

சித்தப்பா மாமா உங்களை நாங்கள் காணவில்லை
மாண்புமிகு தெய்வமென்றே மதித்து வாழ்ந்தோம்
எங்களது சுகம் இனிதே விசாரிப்பீர்
எமக்கான புத்திமதி உரைத்து நீங்கள்
மெத்த மகிழ்ந்து உளமார வாழ்த்தி நின்றீர்

**ஜெயக்குமார், ஜெயப்பிரியா, சிவக்குமார், சதிஷ்குமர், ஜெயப்பிரதா, கௌதமி,**
**வைஷ்ணவி, கௌசிக், இரம்மியா, றோகிட், டிலோஜன், துஷா**

## பேரப்பிள்ளைகள்

எம் அப்பா எம் அம்மா எல்லோரும் போலே
கண் என எமைக் கவனத்துடன் காண்பீர்
தூண்போல எம் குடும்ப உயர்ந்து நின்றீர்
காண்போமா உம்அன்பு திரு உருவத்தை இனி.

**காவியா, என்கோ, தர்ஷா, அவின், டிலன், ஜெய்டன்.**

## அன்புள்ள பெரியப்பா

நீங்கள் பிரான்சில் இருந்த நாட்களில் உங்களுடன் சில நாட்கள் பழகினோம் உங்கள் அன்பு புரியவில்லை, ஏனென்றால் நாங்கள் சிறுபிள்ளைகள். நாங்கள் உங்களுடன் இங்கிலாந்தில் ஒரு சில மாதங்கள் வாழ்ந்தோம். அதில் நீங்கள் காட்டிய அன்பும் அளவு கடந்த பாசமும் அறிந்தோம். பெரியப்பா நீங்கள் இந்த மண்ணுலகைவிட்டு விண்ணுலகம் சென்றுவிட்டீர்கள். உங்கள் நினைவு எங்கள் மனதைவிட்டு என்னாளும் பிரியாது.

**முகம் அக நட்பது நட்பன்று**
**அக நக நட்பே நட்பு - குறள்**
**இறம்மியா றோகிற் - பிரான்ஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர் மைத்துனிமார்

வேறார் தாய் வயிற்றில் உதித்தாலும்
ஒற்றுமையாய் உலகில் வாழ்ந்தோம்
பற்றுதல் உன் பாசம் நேசம் பண்பு
கூற்றவன் கொடுமையால் குறைவயதில் நீ சென்றாய்
வேற்றவர் என்றும் வேறுபாடு என்றுமில்லை
ஆற்றுமோ எம்துயரம் எம் உதி மச்சான்.

தவபாலன் இராஜேந்திரன் விபுலானந்தன் விக்னேஸ்வரன்
கௌசல்யாதேவி ரோகினி யோகராணி, ஜெகமதி, சாருமதி

## மைத்துனர் புலம்பல்

சிரிக்கின்ற உதடு
சேர்த்து
சின்ன மச்சான்
என அழைக்கும்
உதி..............
உன் இனிய பேச்சுக்கு
பழகிய உருவிருக்கு
உயிர் எங்கே போனதடா?

முன்னவர் நாமிருக்க
பின்னவன் நீ
எமை விட்டு
விண்ணுலகம் ஏனடைந்தாய்
ஆண்டாண்டு காலங்கள்
கரைந்தோடிப் போனாலும்
மீளாதடா எமது துயர்
கேளாதோ எமது கண்ணீர்க்குரல்!

செல்லத்துரை இராஜேந்திரா அமெரிக்கா

## மருமக்கள் புலம்பல்

ஆசை ஆசையாய்
பேச -மாமா- எனும்
நேச உறவாக வந்த
எங்கள்
அன்பிற்கினிய மாமா!
உங்களை
ஒரு முறையேனும்
பார்த்திடவோ
இறுதிவரை
தவித்திருந்தோமே!
பெயரேதும் அறியாத

அந்த உயிர் கொல்லி நோய்
உங்கள் உயிர் மீது
பிரியம் கொண்டு
பிரித்ததுவோ
எங்கள் உறவிலிருந்து!
அன்பால் கதைபேச
ஆசைக்கு மாமா என அழைக்க
யாரிங்கு வருவார்
உங்களைப் போன்று......?
ஆண்டவன் பாதத்ததில் - உங்கள்
ஆத்மா சாந்தியடைக!

கௌதமி, வைஷ்ணவி, கௌசிக்
மருமக்கள் கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Uthy Mama

Uthy Mama meant a lot to me. Every time I felt depressed, he always cheered me up. Uthy mama was talented in many different ways. He was a very funny man. He was always making jokes about me and the way I ate food, which made me laugh very much. Uthy mama was always talking in "weird French" which was very amusing but, I didn't understand it most of the time. He helped at the shop - most of the time working hard without stopping. When anyone came into the shop, he talked with him or her respectively in a kind manner no matter whom they were. Uthy mama was very committed to his family and friends. He was a very handsome chap;he was always dressing like an actor and spend a lot of time doing his hair. Uthy mama once made us lasagne which tasted delicious. There is no other man like my mama. He was also a very generous man. Uthy mama always gave us gifts, which we enjoyed. For all these reasons, I am very proud to call him my mama. It is very unfortunate that my mama has passed away; we will all miss him very much. Uthy mama's memory will live with us forever.

We pray that you join god and your spirit will be in peace.

by **Dilojan Vibulananthan**
**Thusa Vibulananthan**

## My Dear Periyappa,

You had been a wonderfull man, shared jokes with us and with every one. Your death news gave a sudden shock. You were gentle, kind and also brave. You worthy help made me clever, industriuos and brave in my life. Every one loved him because he was very kind, nice and helpful to all.

Even though he was not old, he had been a peaceful and useful man to everyone. Whenever he saw me, asked me to sit on a chair and gave me favourite food, which I liked. Suddenly he left us in deep sorrow and passed away from this world to reach almighty God. He is always in our heart and cannot forget our Periyappa. This is my unforgettable loving memory.

Your's lovingly
**Sureckaa**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனின் அஸ்தமனம்

அற்ப ஆயுசுடன் அமரராகிவிட்ட எமது உதயனைப் பற்றிய பல விடயங்கள் கூறலாம். இராஜகோபால் சரஸ்வதி தம்பதியினருக்கு நான்கு ஆண் சகோதரங்களுடனும் மூன்று பெண் சகோதரங்களுடனும் யாழ் பெருமாள் கோவிலடியில் பிறந்தார்.

1984ல் பிரான்ஸ்க்கும் பின்னர் அங்கிருந்து 1997ல் இங்கிலாந்தில் தனது சகோதர சகோதரிகளுடன் சேர்ந்து வாழ விரும்பினார். 1991ல் இந்துமதி இளநங்கையை கரம்பிடித்து 1992ல் அழகான பெண்குழந்தையைப் பெற்றெடுத்தார்.

லண்டனுக்கு வந்தபின் எனது ஸ்தாபனத்தில் வேலைக்குச் சேர்ந்தார். அயராத உழைப்பும் தொழிலில் அக்கறையும் தன் சொந்த தொழில்போலவே விரும்பி விடாமுயற்சியுடன் செய்துமுடிப்பார். தன்னுடன் வேலை செய்பவர்களின் சுக துக்கங்களில் பங்குகெடுத்து சகோதரர் போலவே பழகுவார். எனக்கு பலவழிகளிலும் பக்கதுணையாக இருந்து தொழிலிலும் மற்றும் நான் சுகவீனமாக இருந்தபொழுது என்னை நன்கு கவனித்தார்.

வேலைக்கு வரும்போது தனது மகளையும் அழைத்துவந்து பாடசாலையில் சேர்த்துவிட்டு வேலை முடிந்ததும் மகளையும் அழைத்துக்கொண்டு வீட்டுக்குச் செல்வார். தனது மகளில் அதிக அன்பும் அக்கறையும் உள்ளவர். தனது மகள் நன்றாகப் படித்து பெரிய ஆளாக பெரியபதவியில் பெரியஅந்தஸ்துடன் இருக்க வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். மகளுக்கு உணவு உடை மற்றும் அவர் விரும்பிய பொருட்கள் எல்லாம் கொடுத்து ஒரு ராணியாகவே வைத்திருந்தார். எப்பொழும் மகளுடன் செல்லமாக விளையாடிக் கொண்டே இருப்பார்.

எமது பாசத்திற்கும் நேசத்திற்கும் உரிய உதயனின் இழப்பு ஈடுகொடுக்க முடியாததாகும். அவரின் மனைவி மக்கள் சகோதர சகோதரிகள் உற்றார் உறவினர்க்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- M.S.இராஜகுலசிங்கம்
குடும்பத்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அமரத்துவம் அடைந்த குடும்ப விளக்கான திரு இராஜகோபால் உதயகுமார் அவர்கள் கடும் சுகவீனமுற்று சென்ஜோர்ஜஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளையில் அவரை வந்து பார்த்து எமக்கு ஆறுதல் கூறியும் சென்ற உற்றார், உறவினர், சுற்றத்தார், நண்பர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் தபால் மூலமும் ஆறுதல் கூறியும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியும் மலர் வளையங்களால் கௌரவித்தும் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தனை செய்தவர்களுக்கும் வேண்டிய உதவிகளை எமக்கு செய்தோருக்கும் இறுதிநாட்கிரியை, அந்தியேட்டி, சபண்டி கருமங்களில் பங்கு பற்றிய அன்பு நெஞ்சங்களுக்கு எங்கள் உளம் நிறைந்த நன்றியை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம். இம் நினைவுமலரை தொகுத்தளித்த திரு M.S..இராஜகுலசிங்கம் அவர்களுக்கும் இம்மலரை கூடிய விரைவில் அச்சிட்டுத்தந்த துசு அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் .

இங்ஙனம்
தாயார்
மனைவி, மகள்
அண்ணன்மார், அக்காமார், தம்பிமார், தங்கைமார்
மைத்துனர், மைத்துனிமார்

## Thank You


We Sincerely thank for all our neighbours, friends & relatives who visited to see him when was at hospital & again participated at his funeral.
We also thank for all who sent messages, floral tributes & helped us in many ways.

All Family Members





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed by **JR PRINT** London Tel: 020 8503 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org